## கொழும்பு பல்கலைக்கழகம் - 2013

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு, 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கத்திற்குச் சொந்தான பட்டப்படிப்பு மாணவர் மேலங்கி வாடகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 16,462,244 தொகையான வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் போது உறப்பட்டிருந்த ரூபா 1,430,010 தொகையான செலவினம் என்பன அந்த ஆண்டுகளின் வருமானம் மற்றும் செலவினமாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக விசேட நிதியமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கல்வி டிப்ளோமா 2010/2011 பாடநெறியின் கற்பித்தல் நடவடிக்கைகள் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்திருந்ததுடன், அந்த பாடநெறியின் ஆசிரியர் பயிற்சியும் 2013 திசெம்பர் 06 ஆம் திகதி முடிவடைந்திருந்ததால் அந்த பாடநெறியின் வருமானத்தை தொடர்ந்தும் பிற்போடுவதற்கு தேவை ஏற்படாத போதிலும், ரூபா 5,889,552 தொகை பிற்போடப்பட்ட வருமானமாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 11,379,250,000 கூட்டுப்பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ககள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2004 சனவரி 26 ஆம் திகதிய தேசிய நூலக மற்றும் ஆவண சேவைகள் சபையின் ஆலோசனை சுற்றறிக்கை இலக்கம் 2004/பூச/1 இன் 3.3 பிரிவு | பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு காணாமல் போன நூலக பொருட்கள் கணக்கிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் அதிகாரச் சட்டத்தின் 6(1)(அ) பிரிவு | ஒப்பந்த உடன்படிக்கை கிரயம் ரூபா 5 மில்லியனை விட மேற்படும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு கேள்விதாரரும் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டிய போதிலும், ரூபா 15,663,225 பெறுமதியான ஹேவாமாவத்தை கட்டிடத்தை புதுப்பிக்கும் ஒப்பந்தத்திற்காக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(சீ) பிரிவு | கொள்வனவு செயற்பாடுகள் விரிவாக உள்ளடக்கப்படும் வகையில் பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், தயாரிக்கப்பட்டிருந்த ஹேவாமாவத்தை கட்டிடத்தை புதுப்பிக்கும் நடவடிக்கை தொடர்பான ஒப்பந்தம் அத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.1.2 உப பிரிவு | மாதிரிப் படிவங்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் உறுப்பினர்களால் கையொப்ப மிட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் v ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பிரிவு மற்றும் 2007 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 09/2007(1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அத்தியவசியமல்லாத கல்விசாரா பதவியணியின் பதவிகளுக்காக 60 வயதுக்கு மேற்பட்ட 05 உத்தியோகத்தர்கள் அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி நியமிக்கப்பட்டிருந்தனர். |

| | |
|---|---|
| (ஊ) பல்கலைக்கழக தாபனவிதிக் கோவையின் xx ஆம் அத்தியாயத்தின் 3.1 பிரிவு மற்றும் தாபனவிதிக் கோவையின் x ஆம் அத்தியாயத்தின் 1.6.1 பிரிவு | மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் கல்வி பீடத்தினதும் கலைப் பீடத்தினதும் கல்விசார் பதவியணியின் வருகை, வெளியேறல் மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பேணப்பட்டிருக்காமையால் அதற்காக செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகளை உறுதிப்படுத்த முடியவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 214,339,468 மிகையொன்றானதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 33,033,435 ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 181,306,033 ஆல் அதிகரித்தமைக்கு அரச மானியம் ரூபா 312,143,538 ஆல் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்த 17 உள்ளக பரீட்சைகளினதும் 33 வெளிவாரி பரீட்சைகளினதும் பெறுபேறுகளை வெளியிடுவதில் 06 மாதங்கள் முதல் 14 மாதங்கள் வரையான காலதாமதம் அவதானிக்கப்பட்டது.

### 4.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பல்கலைக்கழகத்தின் 34 விரிவுரையாளர்களிடமிருந்து உடன்படிக்கை மற்றும் பிணைப்பொறுப்பு என்பவற்றை மீறியமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 43,086,046 ஆக இருந்ததுடன், அது தொடர்பாக மேலும் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 07 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 1,892,023 தொகையை அறவிடுவதற்காக 1985 ஆம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும், அவர்களின் முகவரியை கண்டு பிடிக்க முடியாதுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்ததாக உபவேந்தரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த விரிவுரையாளர்களிடமிருந்து உடன்படிக்கை மீறியமையால் அறவிடப்பட வேண்டிய பணத்தை அவர்களின் சேமலாப நிதியத்திலிருந்து கூடிய விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 94 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் உடன்படிக்யையிலுள்ள தவறு காரணமாக நிறுவகத்திற்கு பாதகமாக அர்த்தப்படுத்தப்பட்டு சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவது தாமதமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2005 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து விலகிச் சென்ற விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,229,373 தொகையை அறவிடுவதற்காக 13 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இன்னும் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலைமையில் காணப்பட்டது.

### 4.3 நூலக நிர்வாகம்

பல்கலைக்கழகத்தின் தலைமை நூலகத்தைப் பரீட்சித்த போது பல்கலைக்கழகத்தின் 76 விரிவுரையாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த 144 புத்தகங்கள் மீள ஒப்படைக்கப்படாமல் இருந்ததுடன், நிலுவையாக இருந்த காலம் 01 மாதம் முதல் 65 மாத கால வீச்சிலும் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 காலப்பகுதியில் ரூபா 853,563 கிரயத்திலான காணாமல் போன 562 புத்தகங்களுக்கான நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பதவியணியினர் வெற்றிடங்கள்

மீளாய்வாண்டில் கல்விசார் மற்றும் கல்விசாராத பதவியணியில் 414 வெற்றிடங்கள் காணப்பட்டன. 23 விரிவுரையாளர்கள் கல்வி விடுமுறையினையும் 29 விரிவுரையாளர்கள் சபடிகல் விடுமுறையினையும் பெற்றுக்கொண்டிருந்தனர். மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தால் வெளி விரிவுரையாளர்களுக்காக ரூபா 25,719,870 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவு நடவடிக்கைகள்
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) நூலக நிர்வாகம்
(ஈ) கணக்கீடு
(உ) பாடநெறி வருமானம்